# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## தயாரித்தல் மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA


கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 யூலையில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலையும் தயாரித்தல் நடவடிக்கைகளில் சுருக்கத்தினையும் எடுத்துக்காட்டின.

**தயாரிப்பு கொ.மு.சு 44.6**

**2023 யூலை**

தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 யூலையில் 44.6 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தொடர்ந்து வீழ்ச்சியடைந்து தயாரித்தல் நடவடிக்கைகள் மீட்சியடைவதில் தாமதத்தை எடுத்துக்காட்டியது. அனைத்துத் துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த செயலாற்றம் இப்பின்னடைவிற்கு பங்களித்தது.

உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் வீழ்ச்சிக்கு உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் புடவை மற்றும் அணியும் ஆடைத் துறைகளின் தயாரிப்பில் பின்னடைவு பிரதான காரணமாக அமைந்தது. சந்தை விலைகள் குறைவடைந்தமைக்கு மத்தியிலும் குறைவடைந்த கேள்வி நிலைமைகளிலிருந்து உணவு மற்றும் குடிபானத் துறையிலுள்ள அநேகமான பதிலிறுப்பாளர்கள் இன்னும் வருந்துகின்றனர். மேலும், உலகளாவிய சந்தையில் தீவிரமான போட்டி மற்றும் சாதகமற்ற கேள்வி நிலைமைகள் என்பவற்றுக்கு மத்தியில் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையிலுள்ள தயாரிப்பாளர்கள் புதிய கட்டளைகள் இல்லாமையைப் பொறுத்துக்கொண்டனர். புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் வீழ்ச்சிக்குச் சமாந்தரமாக தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவும் மாதகாலப்பகுதியில் குறைவடைந்தன. மேலும், அநேகமான கம்பனிகள் பதவி வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கு முனைந்தமையினால் யூலையிலும் தொழில்நிலை குறைவடைந்தது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 யூலையில் குறுக்கமடைந்தது.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **47.3** | **44.6** | **-** | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 49.5 | 47.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 49.5 | 41.9 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 42.5 | 41.9 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 43.4 | 47.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 48.5 | 45.5 | - | குறுக்கமடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தற்போதைய பொருளாதார சூழலைக் கருத்திற்கொண்டு அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சிறிதளவு மேம்பாட்டினை எடுத்துக்காட்டின.

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் பெறுமதி 2023 யூனுடன் ஒப்பிடுகையில் யூலையில் 48.7 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது.

இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 யூலையில் மெதுவான வேகத்தில் மேம்பட்டது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 யூலையில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 ஓகத்து 14 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 யூலையில் 59.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து மேலும் அதிகரித்து, பணிகள் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இதற்கு முன்னிலை வகித்திருந்தன. எவ்வாறிருப்பினும், நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் சுருக்கமடைந்து காணப்பட்டன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, தங்குமிடம் தொடர்புபட்ட பணிகள், நிதியியல் பணிகள், ஏனைய தனிப்பட்ட பணிகள், மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 யூனுடன் ஒப்பிடுகையில் 2023 யூலையில் அதிகரித்தன.

அநேகமான துணைத் துறைகள் முழுவதுமான மேம்பாடுகளுடன் தொழில் நடவடிக்கைகள், 2023 யூலையில் ஒத்திசைவான வளர்ச்சியொன்றை அனுபவித்தன. அதற்கமைய, ஆண்டுகாலப்பகுதியில் பதிவாகிய உயர்வான சுற்றுலாப் பயணி வருகைகளுக்கு மத்தியில் தங்குமிடம் தொடர்புபட்ட பணிகள் மாதகாலப்பகுதியில் மேம்பாடுகளைப் பதிவுசெய்தன. மேலும், சந்தை வட்டி வீதங்களில் படிப்படியான வீழ்ச்சியினால் தூண்டப்பட்டு நிதியியல் பணிகள் துணைத் துறை மேலும் மேம்பாடுகளைக் காண்பித்தன. இதற்கு மேலதிகமாக, மாதகாலப்பகுதியில் ஏனைய தனிப்பட்ட பணிகள் மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளில் சில சாதகமான அபிவிருத்திகள் அவதானிக்கப்பட்டன.


பல கம்பனிகளில் முன்னெடுக்கப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள் காரணமாக 15 மாதங்களைக் கொண்ட இடைவெளிக்குப் பின்னர் முதற்தடவையாக தொழில்நிலை உயர்வடைந்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் மெதுவான வேகத்தில் குறைவடைந்தன.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **56.7** | **59.5** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | கொ.மு.சு துணைச் சுட்டெண்கள் | | | |
| புதிய வியாபாரங்கள் | 59.4 | 62.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 61.9 | 67.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 50.0 | 51.0 | + | நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 41.4 | 45.1 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 70.8 | 71.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிலவுகின்ற ஆக்கபூர்வமான பொருளாதார நிலைமைகளின் காரணமாக அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் யூலையில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு 59.5**
**2023 யூலை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 யூலையில் 52.7 ஐப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 யூலையில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2023 ஓகத்து 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.
கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.
**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**
தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் இருப்பு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
நிலுவையிலுள்ள பணிகள் : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள்
மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.